மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
பயிற்சிப் பரீட்சை-6

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

6

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... **பெயர்** ..... **ஒப்பம்**
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... **பெயர்** ..... **ஒப்பம**
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... **பெயர்** ..... **ஒப்பம்**
அதிபர் மேர்பாற்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.ikeduk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான மூன்று உருக்கள் எவை?




(1) A உம் B உம் D உம் (2) B உம் C உம் E உம் (3) A உம் C உம் E உம்

3. பின்வரும் உருக்களில் காணப்படும் சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கக்கூடிய முறை யாது?


A


B


C



D

(1) A,B உம் C,D உம் (2) A,C உம் B,D உம் (3) A,D உம் B,C உம்

4. பின்வரும் உருக்களில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று எது?









(1) நீரில் மட்டும் வாழும் (2) நீரிலும் தரையிலும் வாழும் (3) முட்டையிட்டு இனம்பெருக்கும்

5. கட்டம் A இல் உள்ள உருவிற்கு ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு கட்டம் B இல் உள்ள உருவில் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

கட்டம் A



கட்டம் B



(1) மூன்றிலும் கூடவாகும் (2) மூன்றிலும் குறைவாகும் (3) மூன்றாகும்

சுட்டெண் :- .....


6. கீழே ஐந்து ரூபாய், பத்து ரூபாய், இரண்டு ரூபாய் நாணயங்கள் வைக்கப்பட்டுள்ள மூன்று உண்டியல்கள் தரப்பட்டுள்ளன.



ஒரு உண்டியலில் இருந்து மூன்று நாணயங்களும் மற்றைய உண்டியலில் இருந்து இரண்டு நாணயங்களையும் மற்றைய உண்டியலில் இருந்து ஒரு நாணயத்தையும் எடுக்கும் போது பெறப்படும் நாணயங்களின் அதிகூடிய பெறுமதி எவ்வளவு?

(1) ரூபாய் 42 (2) ரூபாய் 37 (3) ரூபாய் 26

7. நீரினைக் கொண்ட பாத்திரமொன்று குளிரூட்டியில் மூன்று நாட்கள் வைக்கப்பட்டு வெளியே எடுத்து கீழே A,B,C எனத் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான அமைவினைக் காட்டும் நீர்ப் பாத்திரம் எது?




(1) **A** (2) **B** (3) **C**

8. அருகே உள்ள தளவடிவம் ஒரே நீள அகலங்களைக் கொண்ட மூன்று பலகைகளால் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பலகையின் நீளம் 6 cm உம் அகலம் 3 cm உம் ஆகுமெனின், முழு உருவமானது நிழற்றப்பட்ட பகுதியின் எத்தனை மடங்காகும்?



(1) 3 (2) 6 (3) 5

9. உருவில் ஒரே தராசினால் ஒரு பந்து, ஒரு செங்கல், ஒரு பரிசுப்பொதி என்பவற்றின் நிறையை அளக்கின்ற 3 சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.



இந்தப் பொருட்களின் நிறை பற்றிய தவறான கூற்று

(1) செங்கல்லின் நிறையின் இரு மடங்கு பந்தின் நிறை ஆகும்.

(2) செங்கல்லின் நிறையின் நான்கு மடங்கு பரிசுப்பொதியின் நிறை ஆகும்.

(3) செங்கல்லின் நிறையின் நான்கு மடங்கு பந்தின் நிறை ஆகும்.


10. பின்வரும் பாடல் யாருக்கு மிகச் சரியாகப் பொருந்துகிறது?

நாள்தோறும் நாம் வணங்குபவர்
இவ்வுலகை எமக்குப் பரிசளித்தவர்
இன்பதுன்பத்தில் உடனிருப்பர்
நோய்நொடியுற்ற போதும் அணைத்திடுவர்

(1) பெற்றோருக்கு (2) ஆசிரியருக்கு (3) வைத்தியருக்கு

www.ikedu.lk

11. தரப்பட்டுள்ள மெழுகுவர்த்திகளை அணையும் நேரத்திற்கேற்ப ஒழுங்குபடுத்துவதற்கு செய்யவேண்டிய ஆகக் குறைந்த செயற்பாடு யாது?



(1) ஒரு மெழுவர்த்தியை இடம் மாற்ற வேண்டும்.

(2) இரண்டு மெழுவர்த்திகளை இடம் மாற்ற வேண்டும்.

(3) மூன்று மெழுவர்த்திகளை இடம் மாற்ற வேண்டும்.


12. ஒரு நாட்டில் மக்கள் திடீரென அதிகளவாக எரிபொருளைக் கொள்வனவு செய்தால் உடனடியாக ஏற்படும் விளைவு?

(1) உலக சந்தையில் எரிபொருள் விலை குறையும்.


(2) மக்களிடம் பணப்புழக்கம் குறையும்.

(3) அந்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்.

13. கீழே உரு A இல் உள்ள வட்டமானது உரு B இல் உள்ள சதுரத்தினுள் வைக்கப்பட்டுள்ளது. உரு B இல் உள்ள சதுரத்தினைப் போன்று ஐந்து சதுரங்களால் உரு C ஆக்கப்பட்டுள்ளது.




உரு A



உரு B

உரு C



இதற்கமைவாக உரு C இனைச் சுற்றிவரவுள்ள நீளம் யாது?

(1) 96cm (2) 48cm (3) 128cm

14. அருகே உள்ள வெற்றுக் கட்டங்கள் 1 தொடக்கம் 9 வரையான இலக்கங்களைப் பயன்படுத்தி நிரப்பப்பட வேண்டும்.


- ஒரு இலக்கத்தை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- ஒரு கூட்டுக்குள் ஒரு இலக்கம் மட்டுமே இடப்பட வேண்டும்.
- கட்டங்களில் இலக்கங்கள் இடப்பட்ட பின் நிரையாகவேவா, நிரலாகவோ, குறுக்காகவோ கூட்டும் போது விடை 15 ஆக அமைய வேண்டும்.

	9	4
	A	
6		B

வெற்றுக்கூடு A,B ஆகியவற்றுக்கு பொருத்தமான இலக்கங்கள் முறையே


(1) 8,7 (2) 3,8 (3) 5,8

15. தரப்பட்டுள்ள வரிப்படம் பிராணிகள், பூச்சிகள், கரப்பான் பூச்சி, பறவைகள் என்பவற்றுக்கிடையான தொடர்பைக் காட்டுகிறது. இதிலே வட்டம் C ஆனது எதனைக் குறித்து நிற்கிறது?



(1) பூச்சிகளை (2) பறவைகளை (3) பிராணிகளை

16. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?




(1) 48 (2) 80 (3) 77

www.ikedu.lk

17. கண்காட்சி ஒன்றில் 120 மாணவர்கள் பங்குபற்றினர். இவர்கள் நான்கு மாணவர்களுக்கு ஒரு தலைவர் என்ற வகையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் எனின், பிரிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 18 (2) 30 (3) 24

18. 

இவ் உருவில் இனங்காணக்கூடியதாக எத்தனை முக்கோணிகள் உள்ளன?


(1) 10 (2) 6 (3) 12

19. தரம் 5 இல் உள்ள மாணவர்கள் தொடர்பான ஐந்து கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- கூற்று A – தரம் 5A இல் உள்ள ஆண்களை விட தரம் 5C இல் உள்ள பெண்கள் அதிகம்.
- கூற்று B – தரம் 5B இலும் 20 மாணவர்கள் குறைவாக 5A யில் உள்ளனர்.
- கூற்று C – தரம் 5A, 5B, 5C யில் உள்ள மாணவர் எண்ணிக்கை 100 ஆகும்.
- கூற்று D – 5A யில் உள்ள மாணவர் எண்ணிக்கை 10 ஆகும்.

தரம் 5C இல் உள்ள மாணவர் எண்ணிக்கையை கண்டறிவதற்கு தேவைப்படும் கூற்றுக்கள் எவை?

(1) ACD (2) CDA (3) DBC

20. 

13 12 6

தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் ஒவ்வொரு உருவமும் வேறுபட்ட இலக்கங்களைக் கொண்டவையாகும். இதற்கமைய □ + ▭ இன் பெறுமதி யாது?

(1) 12 (2) 13 (3) 7

21. ஈரிலக்க எண்ணொன்றின் இரண்டாவது இலக்கமானது முதலாவது இலக்கத்தை விட இரண்டினால் கூடியது. இவ்விரு இலக்கங்களையும் மாற்றி எழுதும் போது கிடைக்கப் பெறும் புதிய எண்ணை முதலில் இருந்த எண்ணுடன் கூட்டும் போது 132 கிடைக்கிறது. அவ்வாறெனின் ஆரம்ப எண் யாதாக இருக்கும்?

(1) 79 (2) 57 (3) 69

22. முச்சக்கர வண்டியில் பயணம் செய்வதற்கு முதல் 1km இற்கும் அதற்கு குறைவான தூரத்திற்கும் ரூபாய் 200.00 உம், மேலதிகமாக அதிகரிக்கும் ஒவ்வொரு km இற்கும் ரூபாய் 60.00 உம் அறவிடப்படும் எனின், போக்குவரத்துக் கட்டணமாக ரூபாய் 680.00 செலவு செய்யும் ஒருவர் பயணம் செய்த தூரம் யாது?

(1) 9km (2) 8km (3) 7km

23. 2022 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். ஜக்சன் தனது நாட்காட்டியில் முடிந்த மாதத்தின் பக்கத்தைக் கிழித்தபோது நாட்காட்டி கிழிந்து விட்டது. கிழிந்த நாட்காட்டியின் ஒரு பக்கத்துண்டு தரப்பட்டுள்ளது.

தி	செ	பு	வி	வெ	ச	ஞா
★	★	★	★	★	1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

இது எந்த மாதத்திற்குரிய பக்கமாக அமையக்கூடியது?

(1) வைகாசி (2) புரட்டாதி (3) ஐப்பசி

24. ஒரு வியாபாரியிடம் மூன்று விதமான நிறைகளைக் கொண்ட பொதிகள் மட்டும் இருந்தன. அவற்றின் மொத்த நிறை 7kg ஆகும். அவர் அப்பொதிகளைப் பயன்படுத்தி 1kg தொடக்கம் 7kg வரை பொருட்களை நிறுத்தெடுத்தார். எனின், அவரிடம் இருந்திருக்க முடியாத நிறையைக் கொண்ட பொதி பின்வருவனவற்றுள் எது?

(1) 2kg (2) 3kg (3) 4kg

25. பின்வரும் நிகழ்வுகளை A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.


(*A*)


(*B*)



(*C*)


(*D*)


(*E*)


(1) A,B,C,D,E (2) A,D,B,C,E (3) A,D,B,E,C

26. கீழே தரப்பட்டுள்ள உரு A எனும் செவ்வக வடிவத் தாளானது புள்ளிக் கோடுகளின் வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடிக்கப்பட்டு உரு B உம், உரு B ஆனது புள்ளிக் கோடுகளின் வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடிக்கப்பட்டு உரு C உம் பெறப்பட்டுள்ளன. பின்னர் உரு C இல் காட்டப்பட்டுள்ளவாறு முக்கோண வடிவிலும் அரைவட்ட வடிவிலும் இரு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டன. பின்னர் அத்தாளை விரிக்கும் போது தோன்றும் சரியான உரு எது?


உரு A


உரு B


உரு C


(1)


(2)


(3)

27. ஒரு கறுப்புப் பையில் மூன்று பொருட்கள் இருந்தன.

- அந்தப் பையைக் குலுக்கியபோது கணீர் என்ற ஒலி கேட்டது.
- பையின் அருகே காந்தத்தினைக் கொண்டு சென்றபோது காந்தம் பையைக் கவர்ந்தது.
- முகர்ந்து பார்த்தபோது நறுமணம் வீசியது.

இதன்படி பையில் இருக்கமுடியாத பொருள் எது?

(1) ரெஜிபோம் (2) இரும்பு (3) மல்லிகைப் பூ

28. ஒரு பென்சிலின் விலை ரூ 12.00 ஆகும். மூன்று பென்சில் வாங்கும் போது ஒரு பென்சில் இலவசமாகக் கிடைக்கும் எனின், 8 பென்சில்களை வாங்கியவர் ஒரு பென்சிலிற்காக செலவழித்த பணம் யாது?

(1) ரூ 10.00 (2) ரூ 9.50 (3) ரூ 9.00

29. கிழக்கு வானில் கருமேகத்தைக் கண்ட சிறுவன் இன்றும் மழை பெய்யப்போகின்றது எனக் கூறினான். இக்கூற்றின் மூலம் உணர்த்தப்படுவது

(1) இன்று மழை பெய்யப் போகின்றது

(2) இது ஒரு காலைப் பொழுதாகும்


(3) நேற்று மழை பெய்துள்ளது

30. நண்பர்கள் சிலர் ஒரு குழுவாக இணைந்து சுற்றுலா சென்றனர். வழியில் எதிரே வந்த ஒருவர் எத்தனை பேர் சுற்றுலா செல்கின்றீர்கள் எனக் கேட்டார். அதற்கு அக்குழுவிலிருந்த ஒருவர்,

- இக்குழுவில் உள்ள எங்களின் எண்ணிக்கையையும்
- எங்களைப் போன்ற இன்னொரு குழுவில் இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையையும்
- எங்களில் அரைவாசி எண்ணிக்கையானோரையும்
- எங்களில் கால்வாசி எண்ணிக்கையானோரையும்
- உன்னையும் சேர்த்தால் 100 பேர் எனக் கூறினார்.

எனின், எத்தனை பேர் சுற்றுலா சென்ற குழுவில் இருந்தார்கள்?

(1) 36 (2) 18 (3) 38

31. 

அருகே தரப்பட்டுள்ள திண்ம உருவானது, ஒரே அளவான சதுரமுகிகளையும் ஒரே அளவான கனவுருக்களையும் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. இதில் 16 சதுரமுகிகள் உள்ளன எனின், இவ்வுருவில் உள்ள கனவுருக்கள் எத்தனை?


(1) 4 (2) 5 (3) 6

32. தரப்பட்டுள்ள திண்ம உருக்களில் உச்சிகளின் எண்ணிக்கை குறைந்ததிலிருந்து கூடியது வரை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கினைக் கொண்ட விடை எது?



(1) R,T,P,S,Q (2) R,T,P,Q,S (3) R,T,S,P,Q


33. கீழே தரப்பட்டுள்ள காட்போட் அட்டையில் மிகப்பெரிய சதுரங்கள் இரண்டை வெட்டிய பின்னர் எஞ்சும் பகுதியைச் சுற்றிவர உள்ள நீளம் யாது?



(1) 28cm (2) 48cm (3) 30cm


34. தரப்பட்டுள்ள உருக் கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.






(1) (2) (3)


35. கபிலன் நீண்டதூர ஓட்டத்திற்கான பயிற்சியின்போது முதலாம் நாளில் 2km தூரமும் இரண்டாம் நாளில் 5km தூரமும் ஓடினான். முதலாம் இரண்டாம் நாட்களில் ஓடிய தூரங்களுக்கிடையேயான வித்தியாசத்தின் 2 மடங்கு தூரத்தை மூன்றாம் நாளில் ஓடினான். அவன் மூன்று நாட்களிலும் ஓடிய தூரத்தின் அளவுகளைச் சரியாகக் காட்டும் விடை எது?



(1)




(2)



(3)

36. 15 பேர் ஒரு வேலையை 9 நாள்களில் செய்து முடிப்பர். அவர்கள் 3 நாள்கள் வேலை செய்தனர். அதன் பின்னர் 5 பேர் வேலையில் இருந்து விலகினர் எனின், மீதமுள்ள வேலையை முடிக்க எத்தனை நாள்கள் எடுக்கும்?

(1) 7 (2) 8 (3) 9

37. 

தரப்பட்ட உருவில் உள்ள மூன்று வட்டங்களும் ஒரே அளவானவை. இதில் A இலிருந்து B வரையிலான நீளம் 6cm ஆகும். P இல் இருந்து Q வரை பயணித்த கம்பளிப் பூச்சியானது, PQ ஐ ஒரு பக்க நீளமாகக் கொண்ட சமபக்க முக்கோணி வழியே முழுமையாகப் பயணிக்க இன்னும் பயணம் செய்யவேண்டிய தூரம் யாது?

(1) 48cm (2) 72cm (3) 24cm

38. ஒருவர் தன்னைப் பற்றிக் கூறும் பின்வரும் கூற்றுக்களில் ஒரு கூற்று தொடர்பற்றதாகும். தொடர்புள்ள கூற்றுக்களாக அமையக்கூடியவை,

A - எனது தம்பிக்கு சகோதரர்கள் ஒருவரும் இல்லை.

B - எனது அக்காவிற்கு சகோதரர்களின் எண்ணிக்கைக்குச் சமனான சகோதரிகள் உள்ளனர்.

C - எனது தம்பிக்கு ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் உள்ளனர்.

D - பெண்ணாகிய எனக்கு இருக்கும் சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை நான்காகும்.

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D

39. பனை, தென்னை, கமுகு என்றவாறு மரங்கள் வட்ட வடிவில் நடப்பட்டிருந்தன. அங்கு 26 பனை மரங்களும் 25 தென்னை மரங்களும் 30 கமுகு மரங்களும் இருந்தன எனின், அருகருகே நடப்பட்டிருந்த கமுகு மரங்கள் எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6

40. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தனிநபர் ஒருவரின் கூற்றாக அமையக்கூடிய கூற்று எது?

(1) மாரி காலத்தில் மழை பெய்யும்.

(2) படித்தால் வாழ்வில் முன்னேற முடியும்.

(3) வாழைப்பழமே மிகவும் சுவையானது.

★★★★★

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 6

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

6

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

அது ஓர் அழகான கடற்கரை. பரந்து விரிந்த வெண்மணலில் கால்கள் புதையும்படியாக சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். குளிர்காற்று சிலுசிலு என இதமாக வீசியது. சிறு நண்டுகள் மணலில் வரைந்த படங்களை அலைகள் இடையிடையே அழித்துச் சென்றன. தொலைவில் தெரிந்த அடிவானில் பரிதி கடலினுள் மூழ்கத்தொடங்கியது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. இப்பந்தியில் குறிப்பிடப்படும் ஒரு நாளின் பொழுதினைக் கீழே தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) காலைப்பொழுது (2) மாலைப்பொழுது (3) இரவுப்பொழுது

ii. இதமாக வீசியது எது?

……..

iii. நண்டுகள் வரைந்த படங்களை அழித்துச் சென்றவை எவை?

……..

iv. "கீறிய" என்பதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

……..

v. பந்தியில் இடம்பெற்றுள்ள இரட்டைக் கிளவி ஒன்றைத் தருக.

……..

vi. உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைச்சொல் ஒன்று தருக.

……..

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களிலுள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

முதலாம் தவனைப் பரீற்சை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

……

3. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

i. நான் வீட்டிலை இருக்கிறேன்.

……..

ii. குமார் மைதானத்தில் சென்று கரப்பந்து விளையாடுகின்றான்.

……..

4. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

சந்தைகள் பூங்காக்கள் வைத்தியசாலை என்பன பொதுச்சொத்துக்கள் ஆகும்

www.lkedu.lk

சுட்டெண்:-……..

5. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

i. மனிதர்கள் /பணம்/ இன்றைய / விரும்புகின்றனர் / அனைவரும் / சம்பாதிக்கவே / உலகில்

……

……

ii. கடமை/வழங்கப்படும்/ உங்கள்/ பாதுகாக்க /புத்தகங்களை /இலவசமாக / ஆகும்/ வேண்டியது

……

……

6. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

i. கிளிக்குஞ்சுகள் மரப்பொந்தில் இருந்தது. ( )

ii. நானும் அம்மாவும் தினமும் கோயிலுக்குச் செல்கின்றோம். ( )

iii. அப்பா சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கினார். ( )

iv. அமாவாசை தினத்தில் பல பறவைகள் பறக்கும். ( )

7. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. தட்டிக்கொடுத்தல் : ……..

ii. கங்கணங்கட்டுதல் : ……..

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை புள்ளிக்கோட்டில் எழுதுக.

திருப்தியற்ற மனம் : ……

9. கட்டத்தினுள் இணைமொழிகளில் மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

குப்பை கூளங்களை , பேரும் புகழும் , குன்றும் குழியுமாக , அங்குமிங்கும்

i. வீதிகள் எங்கும் குப்பைகள் ……..பரந்து காணப்பட்டன.

ii. நாம் ……சேர்த்துக் கூட்டெரு தயாரித்தோம்.

10. பின்வரும் வாக்கியத்தை பெண்பால் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

தம்பி மாலையில் கடற்கரையில் விளையாடினான்.

……

11. ஒவ்வொரு ஆங்கிலச்சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i. Fingers :…… ii. Market : ……

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



i.

B		t			e



ii.

C			o		u		t			

www.ikedu.lk

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

i. drink / water / We / boiled

……

ii. my / play / I / friends / with

……

14. 'அடிரூல' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

……

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

பந்து இருக்கின்றது.

……..

16. முப்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஏழு எனும் எண்ணுடன் இரண்டைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

……..

17. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு அமைய விரித்து எழுதுக.

9639 = …… + …… + …… + ……

18. எண் கோலத்தில் வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?

……. , ……., 30 , 36 , 42 , 48

19.

6	0
3	

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை மூன்றினால் வகுக்கும்போது வரும் விடை யாது?

……

20. பழமரத் தோட்டத்தில் பறிக்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

	மாம்பழம்	கொய்யாப் பழம்
முதலாவது தடவை	2457	1456
இரண்டாவது தடவை	1894	930

i. இரண்டு தடவைகளிலும் பறிக்கப்பட்ட மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது?

……..

ii. இரண்டு தடவைகளிலும் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடு யாது?

……..


21. 305 ஐ 4 இனால் பெருக்கும்போது வரும் விடை யாது?

……..

22. ஒரு குவளையில் 3*l* 275m*l* எண்ணெய் உள்ளது. அவ்வாறான 3 குவளைகளில் உள்ள எண்ணெயின் மொத்த அளவு யாது?

……*l* ……m*l*

23.




அருகே தரப்பட்டுள்ள திண்ம உருவின் பெயர் யாது?


……

www.ikedu.lk

24. உருவில் உள்ள தளவடிவங்களில் $\frac{3}{4}$ பங்கின் எண்ணிக்கை யாது?



……

25. 

அருகே உள்ள F என்ற ஆங்கில பெரிய எழுத்து வடிவ உருவினுள் காணப்படும் செங்கோணங்கள் எத்தனை?

……

26. கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள முற்பகல் நேரத்தினை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரம் காட்டும் விதத்தில் தருக.



……


27. குமார் கோயிலுக்குச் செல்வதற்காக, வீட்டிலிருந்து துவிச்சக்கரவண்டியில் 1km 750m தூரமும் படகில் 3km 500m தூரமும் மோட்டார் சைக்கிளில் 13km 800m தூரமும் பயணம் செய்து கோயிலை அடைந்தான். குமார் மொத்தமாக தரையில் பயணித்த தூரம் எவ்வளவு?

……Km……m

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	1 kg இன் விலை		அளவு	விலை	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
வெங்காயம்	290	00	2500g	i) ……	……..
மிளகாய்	ii) ……..	…….	600g	372	00
தக்காளி	724	00	250g	iii)…..….	……..
மொத்தம்				iv) …..…	……..

29. ஒரு கிராமத்திலுள்ள சிறுவர்கள் நாட்டிய மரங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



i. தோடை மரத்தினை நாட்டிய சிறுவர்களின் எண்ணிக்கை **5** ஆகும். அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

ii. மா, பலா, பப்பாசி ஆகிய மரங்களை நாட்டிய சிறுவர்களின் எண்ணிக்கை யாது?

……..

www.ikedu.lk

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. "கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் சிறிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்காகவும் எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது வீட்டிலுள்ள அனைவரது மனங்களிலும் தோன்றட்டும்" என்பது, மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில்
(1) மனவுறுதி (2) மலர்வு (3) பிரார்த்தனை

31. பிராணிகளின் கடிவாயில் படும் உமிழ்நீரில் உள்ள நோய்க்கிருமிகள் உடலினுள் செல்வதனால் ஏற்படும் நோய் எது?
(1) கழிச்சல் நோய் (2) நீர்வெறுப்பு நோய் (3) கொள்ளை நோய்

32. நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தொகுதியாக அமைவது எது?
(1) தேங்காய் , பாக்கு , தாமரை
(2) மஞ்சாடி , குன்றிமணி , புலிநகம்
(3) எருக்கலை , தணக்கு , எண்ணை

33. நன்றாக முற்றிய வித்தினை இனங்காணத்தக்க ஓர் இயல்பு பின்வருவனவற்றுள் எது?
(1) நீரைக் கொண்ட பாத்திரத்தில் இடும் போது வித்து அமிழ்ந்து போதல்
(2) வித்தின் இடையிடையே புள்ளிகள் காணப்படல்
(3) வித்தின் நிறம் கருநிறமாக இல்லாமை

34. உடலுழைப்பை சக்தி முதலாகக் கொண்ட போக்குவரத்துச் சாதனம் எது?
(1) முச்சக்கர வண்டி (2) துவிச்சக்கர வண்டி (3) உந்துருளி

35. பச்சையாக உண்ணக்கூடிய உணவுப்பொருட்களை உண்பதற்கு முன் செய்ய வேண்டியது யாது?
(1) உப்பு நீரில் கழுவுதல்
(2) கொதிநீரில் கழுவுதல்
(3) கழுவாது நேரடியாக உண்ணுதல்

36. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை
(1) தேனில் அமிழ்த்தி வைத்தல்
(2) சுவையூட்டிகளைச் சேர்த்தல்
(3) உப்புக்கரைசலில் அமிழ்த்தி வைத்தல்

37. காற்றின் மூலம் இயங்கும் இசைக்கருவித் தொகுதியை மட்டும் கொண்ட விடை.
(1) புல்லாங்குழல், மிருதங்கம், வயலின்
(2) வீணை, நாதஸ்வரம், தாளம்
(3) மகுடி, கொம்பு, சங்கு

38. நீலம், பச்சை, சிவப்பு ஆகிய நிறத்தொட்டிகளில் இடப்படும் கழிவுப்பொருட்கள் முறையே
(1) கண்ணாடி , பொலித்தீன் , கடதாசி
(2) கடதாசி , உணவு , கண்ணாடி
(3) பிளாஸ்ரிக் , கண்ணாடி , உணவு

39. படத்தில் காட்டப்படும் இலச்சினை எதனைக் குறித்து நிற்கிறது.



(1) இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்
(2) இலங்கை அஞ்சல் சேவை
(3) இலங்கை கனியநெய்க் கூட்டுத்தாபனம்.

40. சூழல் நேய பூச்சிக்கட்டுப்பாட்டு திரவமொன்றைத் தயாரிப்பதற்கு தேவையான வித்து எது?
(1) ஆமணக்கு (2) ஆடாதோடை (3) வேம்பு

www.ikeou.lk

41. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?

(1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்

(2) ஒல்லாந்தர், ஆங்கிலேயர், போர்த்துக்கேயர்

(3) ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்

42. கீழே தரப்பட்டுள்ள குறியீடு எதனை உணர்த்துகிறது?



(1) ஈரலிப்பில் இருந்து பாதுகாப்பது

(2) நொருங்கக் கூடியது

(3) கவனமாகக் கையாளவும்

43. ஆந்தையினால் மனிதருக்கு கிடைக்கும் நன்மையாகக் கருதக்கூடியது எது?

(1) மகரந்த சேர்க்கைக்கு உதவுதல்.

(2) வித்துக்கள் பரம்பலடைய காரணமாதல்

(3) தீங்கான பிராணிகளை அழித்தல்

44. பின்வருவனவற்றுள் பால் சார்ந்த உற்பத்திப் பொருள் அல்லாதது

(1) மாஜரீன் (2) தயிர் (3) சீஸ்

45. கோபத்தை கட்டுப்படுத்தினால் நன்மை பெற முடியும் என்பதை எடுத்துக்காட்டும் கதை எது?

(1) சிங்கமும் சுண்டெலியும் கதை

(2) புறாவும் எறும்பும் கதை

(3) முதலையும் குரங்கும் கதை

46. சேனைகளில் செய்கை பண்ணும் பயிர்களைக் கொண்ட விடை

(1) நெல், தென்னை (2) இறுங்கு, தினை (3) தேயிலை, இறப்பர்

47. கடதாசிகளைக் கிழித்தும் மடித்தும் செய்யப்படும் ஆக்கங்கள் முறையே

(1) ஒரிகாமி, கொலாஜ் (2) கொலாஜ், அல்பனா (3) கொலாஜ், ஒரிகாமி

48. வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், வட மாகாணம் என்பவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒப்பநாயக்க பெருங்கொடி, கப்டன் டோசன் கோபுரம், பெருக்கமரம் என்பன காணப்படும் மாவட்டங்கள் முறையே

(1) கண்டி, அநுராதபுரம், மன்னார்

(2) மன்னார், கண்டி, அநுராதபுரம்

(3) அநுராதபுரம், கண்டி, மன்னார்

49. பின்வருவனவற்றுள் பற்சில்லுகளைக் கொண்டிராத கூட்டமாக அமைவது

(1) துவிச்சக்கரவண்டி, கப்பி (2) கப்பி, பாக்குவெட்டி (3) கடிகாரம், மோட்டார்சைக்கிள்

50. "நேர்மையுடன் செயற்படுவோம் நேர்த்தியாக வேலை செய்வோம்." எனும் பாடலானது.

(1) தேசப்பற்றுப் பாடல் (2) தெய்வீகப் பாடல் (3) நடத்தையைக் காட்டும் பாடல்

51. புராதன காலத்தில் கதிரையில் தடிகள் கட்டித்தூக்கிச் செல்லப்பட்டவர்கள் யாவர்?

(1) மன்னர்கள், பெரியார்கள் (2) வயோதிபர், முடவர் (3) தலைவர்கள், சிறுவர்கள்

52. பின்வருவனவற்றுள் வீதிக்குறியீட்டில் அதிவேகப்பாதையை குறிக்கப் பயன்படாதது எது?

(1) ஊதா நிற ஆங்கில எழுத்துக்கள்

(2) ஊதா நிற தமிழ் எழுத்துக்கள்

(3) ஊதா நிற எண்கள்

www.ikedu.lk

53. பின்வருவனவற்றுள் எதன் மூலம் சூழல் மாசடைதல் அதிகரிக்கின்றது?
(1) ஈருருளி பாய்க்கப்பல் என்பவற்றின் அதிக பாவனை
(2) ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்சக்தி பெறுதல்
(3) நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்குதல்

54. மண் கழுவிச் செய்யப்படுவதை தடுக்கச் செய்யக்கூடியது
(1) தேங்காய் உரிமட்டை அடுக்குதல்
(2) கம்பி வேலி அமைத்தல்
(3) சிறிய வாய்க்கால்கள் அமைத்தல்

55. மாத்தளை, கொழும்பு, மன்னார் என்பன இலங்கையின்
(1) மூன்று மாகாணங்கள் (2) மூன்று கரையோர மாவட்டங்கள் (3) மூன்று மாவட்டங்கள்

56. மாணவரது மனதில் வீரம், ஆளுமை, நாட்டுப்பற்று என்பன ஏற்படும் வகையில் கற்பித்தலில் ஈடுபட்டவர்.


(1)


(2)


(3)

57. மேசன் வேலை, மரவேலை, மீன்பிடித்தொழில் ஆகியவற்றில் ஈடுபடும் தொழிலாளிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் கொண்ட தொகுதிகள் முறையே
(1) நீர்மட்டம், சீவுளி, அத்தாங்கு
(2) நீர்மட்டம், பட்டறைக்கல், கரப்பு
(3) தூக்குக்குண்டு, கைவாள், துருத்தி

58. ஒரு குறித்த சமயத்தவர்களுக்கு உரித்தான தனித்துவத்தைக் கொண்ட தொகுதி
(1) தலதா ஊர்வலம், மீலாத்விழா, வேல் ஊர்வலம்
(2) மிஹிந்து ஊர்வலம், நத்தார், தலதா ஊர்வலம்
(3) றம்ழான், மீலாத்விழா, ஹஜ்பெருநாள்

59. உணவைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் உண்ணாமை காரணமாக ஏற்படக் கூடிய நோய்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) வயிற்றுக்கோளாறு, ஒவ்வாமை, மாலைக்கண்
(2) வயிற்றோட்டம், வாந்திபேதி, ஒவ்வாமை
(3) வயிற்றோட்டம், குருதிச்சோகை, வாந்திபேதி

60. " வீதியில் நடந்து செல்லும்போது நாம் செயற்படவேண்டிய விதம்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

i. ……

……

ii. ……

……

iii. ……

……

www.ikeduk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

பயிற்சிப் பரீட்சை 6 (10.11.2022)

தரம் 5 **புள்ளித்திட்டம்**

6

வினாத்தாள் I (விடைகள்)

01)	2	11)	1	21)	2	31)	2
02)	2	12)	3	22)	1	32)	1
03)	2	13)	1	23)	3	33)	3
04)	1	14)	3	24)	2	34)	2
05)	1	15)	2	25)	3	35)	3
06)	1	16)	2	26)	2	36)	3
07)	1	17)	3	27)	1	37)	1
08)	2	18)	2	28)	3	38)	3
09)	3	19)	3	29)	3	39)	2
10)	1	20)	1	30)	1	40)	3

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	(2) மாலைப்பொழுது (கோடிட வேண்டும்)	01 புள்ளி
	(ii)	குளிர்காற்று	01 புள்ளி
	(iii)	அலைகள்	01 புள்ளி
	(iv)	வரைந்த	01 புள்ளி
	(v)	சிலுசிலு	01 புள்ளி
	(vi)	விளையாடிக்கொண்டிருந்தார்கள்	01 புள்ளி
02)	முதலாம் தவணைப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.		01 புள்ளி
03)	(i)	நான் வீட்டில் இருந்தேன்.	01 புள்ளி
	(ii)	குமார் மைதானத்திற்குச் சென்று கரப்பந்து விளையாடினான்	01 புள்ளி
04)	சந்தைகள், பூங்காக்கள், வைத்தியசாலை என்பன பொதுச்சொத்துக்கள் ஆகும்.		01 புள்ளி
05)	(i)	இன்றைய உலகில் மனிதர்கள் அனைவரும் பணம் சம்பாதிக்கவே விரும்புகின்றனர்.	01 புள்ளி
	(ii)	இலவசமாக வழங்கப்படும் புத்தகங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை ஆகும்.	01 புள்ளி
06)	(i)	x	01 புள்ளி
	(ii)	✓	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
07)	(i)	உற்சாகப்படுத்துதல்	01 புள்ளி
	(ii)	ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்	01 புள்ளி
08)	இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை		01 புள்ளி

www.ikedu.lk

09)	(i)	அங்குமிங்கும்	01 புள்ளி
	(ii)	குப்பை கூளங்களை	01 புள்ளி
10)	தங்கைமார் மாலையில் கடற்கரையில் விளையாடினார்கள்		01 புள்ளி
11)	(i)	விரல்கள்	01 புள்ளி
	(ii)	சந்தை	01 புள்ளி
12)	(i)	Bottle	01 புள்ளி
	(ii)	Coconuttree	01 புள்ளி
13)	(i)	We drink boiled water	01 புள்ளி
	(ii)	I play with my friends	01 புள்ளி
14)	அடிமட்டம்		01 புள்ளி
15)	போலயதியெனவா		01 புள்ளி
16)	39899		02 புள்ளிகள்
17)	9000 + 600 + 30 + 9		02 புள்ளிகள்
18)	18, 24		02 புள்ளிகள்
19)	102		02 புள்ளிகள்
20)	(i)	6737	02 புள்ளிகள்
	(ii)	563	02 புள்ளிகள்
21)	1220		02 புள்ளிகள்
22)	9 825		02 புள்ளிகள்
23)	கனவுரு		02 புள்ளிகள்
24)	6		02 புள்ளிகள்
25)	7		02 புள்ளிகள்
26)	04:50		02 புள்ளிகள்
27)	15 550		02 புள்ளிகள்
28)	(i) 725.00 (ii) 620.00 (iii) 181.00 (iv) 1278.00		04 புள்ளிகள்
29)	(i)	5 வரை நிழற்ற வேண்டும்.	01 புள்ளி
	(ii)	22	01 புள்ளி

30)	**3**	**36)**	**1**	**42)**	**2**	**48)**	**3**	**54)**	**1**
31)	**2**	**37)**	**3**	**43)**	**3**	**49)**	**2**	**55)**	**3**
32)	**1**	**38)**	**2**	**44)**	**1**	**50)**	**3**	**56)**	**1**
33)	**1**	**39)**	**2**	**45)**	**1**	**51)**	**2**	**57)**	**1**
34)	**2**	**40)**	**3**	**46)**	**2**	**52)**	**2**	**58)**	**3**
35)	**1**	**41)**	**1**	**47)**	**3**	**53)**	**3**	**59)**	**2**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

1 – 15	30 புள்ளிகள்
16 – 29	32 புள்ளிகள்
30 – 59	30 புள்ளிகள்
60	06 புள்ளிகள்
உறுப்பெழுத்து	02 புள்ளிகள்
மொத்தப் புள்ளிகள்	**100**

www.ikeduk.lk